# தரம் -12

## முதலாம் தவணை

## தமிழ்

## பாரதியார் கவிதைகள்

## கண்ணம்மா என் காதலி



Mr S.Logeswaran (ISA – Tamil)
NP/MU/Thunukkai Educational Zone
Mullaitivu

# அறிமுகம்



- ✓ தமிழ் கவிதையுலகில் முதன்மையானவர்
- ✓ நவீன கவிதையின் தந்தை
- ✓ மொழிப்பற்று, நாட்டுப்பற்று, சமூகப் பற்று
- ✓ தமிழ் கவிதையில் மாற்றங்களை மேற்கொண்டவர்
- ✓ கவிதை மூலம் விழிப்புணர்வு
- ✓ பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயிற்பாட்டு படைத்தவர்

# கண்ணன் பாட்டு

- ✓ கண்ணன் பாட்டு எனும் தொகுதியில் பாரதி, கண்ணனை பல்வேறு நிலைகளில் பாவனை செய்து பாடியுள்ளார்.
- ✓ தோழனாக, தாயாக, தந்தையாக சேவகனாக, அரசனாக, சீடனாக, குழந்தையாக, குருவாக மற்றும் காதலன், காதலியாகவும் பாவனை செய்து பாடியுள்ளார்.
- ✓ பெரியாழ்வார் பாடிய “பெரியாழ்வார் திருமொழி” எனும் இலக்கியத்தின் தாக்கம் இதில் உண்டு.
- ✓ பாரதியாரின் கவிதா சக்தியையும் கற்பனை ஆற்றலையும் கண்ணன் பாட்டு நமக்கு கூறும்
- ✓ இத் தொகுப்பில் உள்ள ஓர் பகுதியே “கண்ணம்மா என் காதலி” ஆகும்

# கண்ணம்மா என் காதலி

- ✓ கண்ணன் மீது கொண்ட தெய்வீக காதலை மானுட நிலையில் உணர்ச்சி வெள்ளம் ததும்ப பாரதியாரால் பாடப்பட்டது இது.
- ✓ கண்ணன் மீது கொண்ட காதல் உணர்வை இயற்கையின் பல்வேறு கூறுகளின் ஊடாக மிக நுட்பமாக வெளிப்படுத்தியுள்ளார்.
- ✓ கண்ணன் மீதான உணர்வை வெளிப்படுத்த இயற்கையை ஊடகமாக கொள்கின்றார்.
- ✓ இயற்கை முழுதும் இறைவனைக் கண்ட அனுபவத்தின் வெளிப்பாடு.
- ✓ கண்ணனை காதலியாகப் பாவனை செய்து பாடிய பாடல்

மாலைப் பொழுதிலொரு மேடை மிசையே
வானையுங் கடலையும் நோக்கி யிருந்தேன்!
மூலைக் கடலினையவ் வான வளையம்
முத்தமிட் டேதழுவி முகிழ்தல் கண்டேன்;
நீல நெருக்கிடையில் நெஞ்சு செலுத்தி,
நேரங் கழிவ திலும் நினைப்பின்றியே
சாலப் பலபலநற் பகற் கனவில்
தன்னை மறந்தலயந் தன்னில் இருந்தேன்

ஆங்கப் பொழுதிலென் பின்பு றத்திலே,
ஆள்வந்து நின்றெனது கண்ம றைக்கவே,
பாங்கினிற் கையிரண்டுந் தீண்டி யறிந்தேன்,
பட்டுடை வீசுகமழ் தன்னிலறிந்தேன்,
ஓங்கி வருமுவகை யூற்றி லறிந்தேன்,
ஒட்டு மிரண்டுளத்தின் தட்டி லறிந்தேன்;
“வாங்கி விடடிகையை யேடி கண்ணம்மா!
மாய மெவரிடத்தில்?” என்று மொழிந்தேன்.

சிரித்த ஒலியிலவள் கைவி லக்கியே
திருமித் தழுவி, “என்ன செய்தி சொல்” என்றேன்;
“நெரித்த திரைகடலில் என்ன கண்டிட்டாய்?
நீல விசும்பினிடை என்ன கண்டிட்டாய்?
திரித்த நுரையினிடை என்ன கண்டிட்டாய்?
சின்னக் குமிழிகளில் என்ன கண்டிட்டாய்
பிரித்துப் பிரித்துநிதம் மேகம் அளந்தே,
பெற்ற நலங்கள் என்ன? பேசுதி” என்றாள்.

“நெரித்த திரைக்கடலில் நின்முகங் கண்டேன்;
நீல விசும்பினிடை நின்முகங் கண்டேன்;
திரித்த நுரையினிடை நின்முகங் கண்டேன்;
சின்னக் குமிழிகளில் நின்முகங் கண்டேன் ;
பிரித்துப் பிரித்துநிதம் மேகம் அளந்தே,
பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன் றில்லை;
சிரித்த ஒலியினில்நின் கைவி லக்கியே,
திருமித் தழுவியதில் நின்முகங் கண்டேன்.”

## 1. இயற்கையின் மீது பாரதியின் ஈடுபாடு

- ✓ மாலைப் பொழுதில் கடற்கரையிலிருந்து இயற்கையை இரசித்தல்
- ✓ வானையும் கடலையும் நோக்கியிருத்தல்
- ✓ நெஞ்சத்தினை பறி கொடுத்தல்
- ✓ நேரம் கழிந்து சென்ற நிலையும் இன்றி இருத்தல்
- ✓ பகற் கனவு போல காட்சிகளை கண்டு களித்தல்
- ✓ தன்னை மறந்த நிலை
- ✓ வானம், கடல், மேகம், நீர்த்துளியை ரசித்தல்.

## 2. காதலியை அடையாளம் கண்ட விதங்கள்

- ✓ இரண்டு கைகளையும் தீண்டி அடையாளம் காணல்
- ✓ காதலியின் உடையின் வாசனை மூலம் அறிதல்
- ✓ இயல்பாகவே உவகை எழுவதன் மூலம் வந்தது தன் காதலி என முடிவு செய்தல்
- ✓ இருவர் உள்ளமும் ஒன்றுபட்டு விளங்கியமை

## காதலி மீது கொண்ட ஈடுபாடாக கூறப்படுவன

- ✓ பின்புறத்தில் வந்து நின்று கண்களைப் பொத்தியது காதலியே என உணர்தல்
- ✓ கைகளைத் தொட்டுப் பார்த்து பட்டுடை வாசனையை நுகர்ந்தும் காதலியை அறிந்து கொள்ளல்
- ✓ ஏடி! கண்ணம்மா என உரிமையோடு வினாவுதல்
- ✓ கண்ணம்மாவை தழுவிக் கொள்ளல்
- ✓ கடலில், வானத்தில், அலைகளில் குமிழிகளில் மேகத்தில் எல்லாம் காதலியின் முகத்தினைக் காணல்
- ✓ உள்ளங்கள் ஒன்றுபடுதல்

## கவிதையின் சிறப்புக்கள்

- ✓ கண்ணனை காதலியாக உருவகித்தமை
- ✓ உரையாடற் பாங்கு
- ✓ ஓசை நயம்
- ✓ எளிய பதங்கள்
- ✓ வர்ணனைப் பாங்கு
- ✓ வாசகரை கவர்ந்திழுத்தல்
- ✓ வினா விடைப் பாங்கு



## நயம் கூறுதல்

- ✓ “நீல நெருங்கிடையில் நெஞ்சு செலுத்தி”
- ✓ “திருமித் தழுவியதில் நின்முகங் கண்டேன்”
- ✓ தன்னை மறந்த லயந்தன்னில்”

# முடிவு

கண்ணனை காதலியாக உருவகித்து இக்கவிதை பாடப்பட்டதாக அமைந்திருந்தாலும் வானம், கடல், மேகம், துளி நுரை முதலான இயற்கையின் எல்லா கூறுகளிலும் கண்ணன் என்ற கடவுள் வியாபித்திருப்பதனையே பாரதியார் கண்ணன் மீது கொண்ட பக்தியாக வெளிப்படுத்தினார்.

